## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீஓசி புறொப்பட்டி டெவெலப்மென்ட் அன்ட் மனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கை தகவல்களை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4. கணக்காய்வு நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது

கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சகல ஒப்பந்தக்காரர்களுடனான ஒப்பந்தஉடன்படிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளில் வாடகையானது முற்பணமாக செலுத்தப்படல் வேண்டும். எனினும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் பெறவேண்டிய மீதியானது ரூபா 53,773,854 ஆகும். இதில் 90 நாட்களுக்கு மேலாக ரூபா 35,640,727 அல்லது 66.28 சதவீதமானவை நிலுவையாக உள்ளது. எனவே, | 2024.01.01 இலிருந்து வாடகை மீளாய்வு இலங்கை வங்கி (BOC) மதிப்பீட்டாளர் குழுவில் பதிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டு வாடகை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. சந்தை வீதங்கைப் போல் BOC மேல் மாகாண வடக்கு, BOC மத்திய மாகாண அலுவலகம் மற்றும் BOC மேல் தரக் கிளை_கண்டி என்பவற்றினை தவிர சகல ஏனைய ஒப்பந்தகாரர்களும் | உரிய நேரத்தினுள் வியாபார பெற வேண்டியவைகளை சேகரிப்பதற்குத் சகல தேவையான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |

கம்பனியானது குத்தகை உடன்படிக்கையில் உடன்பட்டவாறு வியாபார மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் வருமானத்தினை சேகரிக்க இயலாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. மொத்த வியாபார மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் பெறவேண்டிய தரப்பினரில், சீபாங் கவுஸ் கண்டியிலிருந்து ரூபா 34,660,564 அல்லது 64.46 சதவீதம் உள்ளதுடன் மிகுதி ரூபா 19,113,290 அல்லது 35.54 சதவீதம் கொள்ளுப்பிட்டி மேர்சன்ட் டவர் கட்டடத்திடமிருந்தும் ஆகும்.

கம்பனியானது 2024 சனவரி மாதத்திலிருந்து வாடகை வீதங்கள் அதிகரித்திருந்தது. எனவே, கொள்ளுப்பிட்டிய மேக்கன்ற்ரைல் ரவரில் உள்ள இலங்கை வங்கி மேல் மாகாண வடக்கு கிளை மற்றும் கண்டி சீபாங் கவுசிலுள்ள இலங்கை வங்கி கிளைகள் என்பன 2024 ஆம் ஆண்டிற்காக வாடகை தொகை வித்தியாசங்களை (தற்போதைய _ முன்னைய வீதம்) செலுத்தியிருக்கவில்லை. வியாபார மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் பெறவேண்டியவைகளின் காலப் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளன.

வாடகை வீதங்களை அதிகரித்திருந்தது. நாங்கள் ஏற்கனவே உதவி பொது முகாமையாளர் (மேல் மாகாணம் வடக்கு) மற்றும் உதவி பொது முகாமையாளர் மத்திய மாகாணம் என்பவற்றுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தது அத்துடன் ஈடுபடுத்திய தொகையிலிருந்து கொடுப்பனவுகளிற்காக BOC சபை அனுமதி பெறுகின்ற நடைமுறை அவர்களுடைய நிதி அதிகார எல்லையைவிட பின்நோக்கியிருந்தது என நாங்கள் புரிந்து கொண்டோம்.

| | விபரம் | 1-30 நாட்கள் | 31-60 நாட்கள் | 61 - 90 நாட்கள் | 90 நாட்களுக்கு மேல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை மீதி (ரூபா) | | | | |
| 1 | **மேர்ச்சன்ட் டவரிலுள்ள ஒப்பந்தக்காரர்கள் - கொள்ளுப்பிட்டி** | | | | | |
| | ஸ்ரீலங்கா மேர்ச்சன்ட பேங் &பைனான்ஸ் பிஎல்சி | 2,468,592 | - | - | - | 2,468,592 |
| 2 | இலங்கை வங்கி _மேல் மாகாணம் வடக்கு | 841,467 | 647,413 | 647,413 | 5,826,714 | 7,963,007 |
| 3 | இலங்கை வங்க_மேல் தரக் கிளை | 257,105 | | | | 257,105 |
| 4 | இலங்கை தகவல் தொழில்நுட்பநிறுவனம் | 1,403,136 | | | | 1,403,136 |
| 5 | வரையறுத்த SLIIT நகரப் பிரிவு (தனியார்) | 1,103,842 | | | | 1,103,842 |
| 6 | வரையறுத்த என்யேனுற்றி (தனியார்) | - | - | - | 3,847,913 | 3,847,913 |
| 7 | டியலொக் அக்ஸியட PLC | 43,810 | | | | 43,810 |
| 8 | வரையறுத்த மொபிட்டல் (தனியார்) | 11,653 | 1,125,898 | 11,089 | (1,672) | 1,146,968 |
| 9 | வரையறுத்த பரர்டி எயார்டல் லங்கா (தனியார்) | - | 81,420 | 17,977 | 25,096 | 124,493 |
| 10 | இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு | 510,397 | | | | 510,397 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வரையறுத்த | | | | | |
| 11 | கியுஎஸ்கோர்ப் லங்கா (தனியார்) | 101,187 | 63,084 | | | 164,271 |
| 12 | ப்ரானிஸ் கெபேடேரியா | 37,844 | 41,913 | | | 79,757 |
| | **மொத்தம் - எம்டி (அ)** | **6,779,033** | **1,959,727** | **676,478** | **9,698,051** | **19,113,290** |
| | **சிபேங்க் ஹவுஸிலுள்ள ஒப்பந்தக்காரர்கள் - கண்டி** | | | | | |
| 1 | இலங்கை மேச்சன்ர் வங்கி மற்றும் நிதி PLC | 31,812 | | | | 31,812 |
| 2 | கொழும்பு பங்கு சந்தை | 78,554 | | | | 78,554 |
| 3 | இலங்கை வங்கி மத்திய மாகாண அலுவலகம் | 1,032,372 | 1,032,372 | 1,032,372 | 9,411,456 | 12,508,572 |
| 4 | இலங்கை வங்கி மேல்தரக் கிளை – கண்டி | 1,836,802 | 1,836,802 | 1,836,802 | 16,531,220 | 22,041,626 |
| | **மொத்தம் -சி பாங்க் (ஆ)** | **2,979,540** | **2,869,174** | **2,869,174** | **25,942,676** | **34,660,564** |
| | **முழு மொத்தம் (ஆ+ஆ)** | **9,758,573** | **4,828,902** | **3,545,653** | **35,640,727** | **53,773,854** |

**1.6 காசு முகாமைத்துவம்**

| | | | |
|---|---|---|---|
| (ii) | வரையறுத்த என்யேனிற்றி (தனியார்) கம்பனியின் குத்தகை உடன்படிக்கை 2021 திசெம்பரில் முடிவடைந்திருந்த போதிலும் ரூபா 3,847,913 ஆன நிலுவையாக இருக்கின்ற மீதி 2025 யூலை 22 ஆன கணக்காய்வு திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வரையறுத்த என்யேனிற்றி (தனியார்) கம்பனியிடம் இருந்து நிலுவைகளை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் தொடங்கியிருந்தது. (வழக்கு இல. DMR 1375/23_ அடுத்த தவணை திகதி 2025 செப்தெம்பர் 01 ஆக உள்ளது. | கம்பனிக்கு நட்டத்தை ஏற்படுத்தாமல் நிலுவைகளை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கப் பட்டுள்ளது. |

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி எப்போதும் உயர் நடைமுறைச் சொத்து நிலையை பேணி வருவதுடன் நீண்டகால முதலீடுகள் மீது இலாபம் ஈட்டுவதில் கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. பின்வரும் அட்டவணையின் பிரகாரம் 2020 முதல் 2021 வரை மொத்த சொத்துக்களுக்கான நடைமுறைச் சொத்துக்களின் சதவீதம் படிப்படியாக 64 சதவீதத்திலிருந்து 43 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளதுடன் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது முறையே 50 சதவீதம் மற்றும் 54 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. தொடர்புபட்ட தரப்பினரிடமிருந்து பெறவேண்டிய தொகை, நடைமுறையல்லாத நிதிச் சொத்துக்கள், உரிமை மூலதனங்களில் முதலீடு, ஏனைய நடைமுறையல்லாத நிதிச் சொத்துக்கள் மற்றும் முதலீட்டு ஆதனங்கள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பை கொண்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது நடைமுறைச் சொத்து வீதம் 37 சதவீதத்திற்கு வீச்சுநிலைக்கு சென்றுள்ளது. | 2024 ஆம் ஆண்டின் போது நீண்டகால முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதன் விளைவால் நடைமுறைச் சொத்து விகிதம் 54 இலிருந்து 37 இற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும் 2025 ஆம் ஆண்டில் தொகுதிக் கடனில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | திரவத்தன்மை மற்றும் இலாபத் தன்மை என்பவற்றிற்கு இடையே சமநிலையொன்றை பேணுவதற்கு பரிந்துரைக்கப் பட்டுள்ளது. |

| விபரம் | 2024 | 2023 | 2022 | 2021 | 2020 |
|---|---|---|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் (ரூபா 000) | 2,540,346 | 2,350,447 | 2,169,300 | 2,112,041 | 2,050,868 |
| நடைமுறை சொத்துக்கள் (ரூபா 000) | 936,329 | 1,257,796 | 1,075,678 | 901,564 | 1,310,738 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை (ரூபா 000) | 3,786 | 1,271 | 1,384 | 2,390 | 6,017 |
| ஏனைய நடைமுறை நிதிச் சொத்துக்கள் % குறுகிய கால முதலீடு (ரூபா 000) | 859,933 | 1,228,592 | 1,043,078 | 883,942 | 1,281,361 |
| மொத்த சொத்துக்களின் % ஆக நடைமுறைச்சொத்துக்கள் | 37 | 54 | 50 | 43 | 64 |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 282 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபமாக ரூபா 309 மில்லியன் தொகை உள்ளது. ஆகையால், நிதி விளைவில் ரூபா 27 மில்லியன் தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது 42 சதவீதத்தினால் நிதி வருமானம் வீழ்ச்சியடைந்தமையே நிதி விளைவு வீழ்ச்சிக்கு பிரதான காரணமாகும்.

### 2.2. பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | முரண் தொகை அதிகரிப்பு (வீழ்ச்சி) (ரூபா) | முரண் (%) | முரணிற்கான காரணம் |
|---|---|---|---|
| நிதி வருமானம் | (121,809,675) | (41.98) | - நிலையான வைப்புக்கள் மற்றும் தொகுதிக் கடன் மீதான வட்டி வருமானம் குறைவான சந்தை வீதங்கள் காரணமாக வீழ்ச்சியடைந்தமை |
| வருமானங்கள் | 99,159,660 | 27.60 | - வட்டி வருமானம் மற்றும் சேவைக் கட்டணங்கள் திருத்தப்பட்ட வாடகை கட்டணங்களின் பிரகாரம் அதிகரித்திருந்தது. |
| உத்தியோகத்தர் கிரயம் | 13,058,564 | 20.85 | - உத்தியோகத்தர் சம்பளங்கள் 12.5 சதவீதத்தல் அதிகரித்திருந்தது. |
| ஏனைய வருமானம் | 342,394 | 91.12 | - அதிகமான லொபி விற்பனைகள் மற்றும் உத்தியோகத்தர் கடன்கள் மீதான வட்டி வருமானம் |

### 2.3. வீதப்பகுப்பாய்வு

கிடைக்கப்பபெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் சில முக்கியமான வீதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | 2024 | 2023 |
|---|---|---|
| தேறிய இலாப விகிதம் - வரிக்கு முன்னர் (சதவீதம்) | 66 | 70 |
| நடைமுறை விகிதம் (தடவைகள்) | 14.4 | 18.2 |
| மொத்த சொத்துக்களுக்கான தேறிய நடைமுறைச்சொத்துக்கள் (தடவைகள்) | 2.9 | 2.0 |